## உம் பாதம் பணிந்தேன்

உம் பாதம் பணிந்தேன் என்னாலும் துதியே
உம்மையன்றி யாரைப்பாடுவேன் இயேசையா
உந்தன் அன்பு உள்ளம் பொஙுகுதே

பரிசுத்தமே பரவசமே
பரனேசருளே பரம்பொருளே
தேடினதால் நான் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர்

நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர்
வழிதப்பி நான் அலைந்திடாமல்
அனுதினம் என்னை தாங்குகிறீர்

என் இதய தெய்வம் நீரே
எனது இறைவா ஆறுயிரே
நேசிக்கிறேன் இயேசுவே
உம்முகம் எங்கு கண்டடைவேன்